# தப்லீக் ஜமாஅத்தில் ஏன் சேரக் கூடாது? - Why Should Not Join Tableegh Jamat?

A.K.. முஹம்மது மீரா ஸாஹிபு ஸூபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். *By:* A.K. Muhammad Meera Sahib Sufi Rahimahullahu

**பதிப்புரை**

ஏக இறைவனின் உயர்திரு நாமம் கொண்டு துவக்கம். எல்லாப் புகழும் அவனுக்கே உரித்தாகட்டும்.

அகில உலகத்திற்கும் அருள்பிழம்பாக அவதரித்த அண்ணல் கோமான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது கிளைஞர்கள், தோழர்கள், இறையன்பர்கள் அனைவர்கள் மீதும் கருணையும், ஈடேற்றமும் உண்டாகட்டும்.

தற்காலத்தில் புதிதாக தோன்றி 'தீன் பணி செய்கிறோம்' என்ற போர்வையை போர்த்திக் கொண்டு கபடத் தனமாக தீனோர்களை வழிகெடுக்கும் கூட்டமான 'தப்லீக் ஜமா அத்தின்' போர்வையை கிழித்தும், போலி வேஷத்தை கலைத்தும் பல கோணங்களிலிருந்து நம் ஸுன்னத் வல் ஜமாஅத் பேரறிஞர்கள் மறுப்பு பத்வாக்கள், கண்டனங்கள் வெளியிட்டு வந்துள்ளனர்.

எனினும், இந்த தப்லீக் ஜமாஅத்தினர்கள் தங்களது சண்டித்தனத்தை கைவிட்டபாடியில்லை. ஆங்காங்கே தங்கள் கைவரிசையை காட்டி மக்களை குழப்பிக் கொண்டும், வழி கெடுத்துக் கொண்டுமே இருந்து வருகிறார்கள். 'இவர்கள் வில்லில் இருந்து எய்யப்பட்ட அம்பு போல் திரும்பி வரமாட்டார்கள்' என்று நபிகள் நாயகம் சொன்ன சொல் நிதர்சனமாகிவிட்டது.

குழம்பி போன நிலையில் நிற்கும் அப்பாவி மக்களுக்கு ஓர் கலங்கரை விளக்கு போல் ஒரு நூல், துடிப்புள்ள ஸுன்னத் வல் ஜமாஅத் இளைஞர்கள், பெரியவர்கள், முதியவர்கள் கையில் ஓர் கேடயமாக இருக்க வேண்டியது இந்நூல்.

ஆணித்தரமான பத்வா தொகுப்புகள் நிறைந்ததொரு நூல் வெளியிட வேண்டுமென்ற நினைப்பு நீண்ட நாட்களாக எங்கள் உள்ளத்தில் நிலை நின்ற போது,

காயல்பட்டணம் ஆன்மீக தோழர், கண்ணியமிகு ஷெய்குனா நாயகம் ஸூபி ஹழ்ரத் அவர்களின் உண்மை ஊழியர், ஜனாப் A.K.. **முஹம்மது மீராசாஹிப்** அவர்கள் தொகுத்தெழுதிய 'தப்லீக் ஜமா அத்தில் ஏன் சேரக் கூடாது?' என்ற நூல் மிகப்பொருத்தமாகவும், இக்காலகட்டத்திற்கு தேவையானதாகவும் இருந்ததினால் எங்களது ஹிஸ்புல்லாஹ் சபையினரால் இதோ இந்நூலை உங்களது கரங்களில் தவழ விடுவதில் அக மகிழ்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

குரோதமான கண் கொண்டல்லாமல் நீதமான நன்நோக்குடன் இதை வாசியுங்கள். நீங்களும் பயன் பெற்று மற்றும் நம் சகோதரர்களுக்கும் பயன் பெறச் செய்யுங்கள். உண்மைக்கு எப்போதும் அழிவில்லை.

இந்நூல் இம்மையிலும், மறுமையிலும் பயனள்ளதாக அமையவும், இன்னும் இது போன்ற பல நூற்களை வெளியிடவும் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக! ஆமீன்.

இவண்,

**ஹிஸ்புல்லாஹ் சபை**

ஸூபிமன்ஸில்கள்

இந்தியா, சிறிலங்கா.

**1**

**786/92**

அல்லாஹ்விற்கே சர்வ புகழும் புகழ்ச்சியும் அஹ்மது நபி ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும்;, அவர்கள் கிளையார்கள், தோழர்கள், இவர்கள் வழி நடந்த மு஍மின்கள், முஸ்லிம்கள் மீதும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக!

யாஅல்லாஹ்! உண்மையை உண்மை என்று நாங்கள் உணர்ந்து அவ்வுண்மையை நாங்கள் பின்பற்றி நடக்கும்படி உணர்த்தி நேர்வழி காட்டிருள்! பொய்மையை பொய் என நாங்கள் உணர்ந்து அப்பொய்யை விட்டு அகன்று நடக்கும் படியாக விளக்கப்படுத்தி நேர்வழி காட்டியருள்!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஹல்லம் அவர்கள், பிற்காலத்தில் இஸ்லாத்தின் பெயரால் தோன்றவிருக்கும் குழப்பவாதிகளைப் பற்றி முன்னறிவிப்பு செய்த ஹதீதுகளில் ஒன்று!

'ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஹல்லம் அவர்கள், 'யா அல்லாஹ்! எங்கள் ஷhம், எமன் தேசங்களுக்கு அபிவருத்தி அருள்வாயாக! என வேண்டியதும், அங்கிருந்த நஜ்தி தேசத்தைச் சார்ந்த ஒருவர் எங்கள் நஜ்து தேசத்திற்கும் வேண்டுங்கள் என கூற, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஹல்லம் அவர்கள் மீண்டும் ஷhமுக்கும், எமனுக்கும் அபிவிருத்தி அருள்வாயாக! என கேட்க, மீண்டும் அந்நஜ்து தேசத்தவர் எங்கள் நஜ்துக்கும் வேண்டுங்கள் எனக் கூற, மீண்டும் ஷhமுக்கும், எமனுக்கும் அபிவிருத்தி அருள்வாயாக! என மூன்று முறையும் ஷhம், எமன் தேசத்தின் அபிவிருத்திக்காக பிரார்த்தித்து விட்டு தோழர்களை

நோக்கி நபி ஸல்லல்லாஹு அலைஹிவஹல்லம் அவர்கள், 'நஜ்து தேசத்தில் அதிர்ச்சி தரும் சம்பவங்களும் குழப்பங்களும் உற்பத்தியாகும்.' என தனது புண்ணியமிகு விரலை நஜ்து தேசம் பக்கமாக நீட்டி திருவாய் மலர்ந்தருளினார்கள்.

அறிவிப்பாளர் :- அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு

நூல் :- புகாரி பாகம் 2, பக்கம் 1051.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஹல்லம் அவர்களுடைய முன்னறிவிப்பின் படி ஹிஜ்ரி 1111ல் நஜ்து தேசத்தில் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் தோன்றினான். அவன் தன் தீய கொள்கைகளை '**கிதாபுத் தவ்ஹீது**' எனும் நூலில் எழுதினான். அதை உர்துவில் இஸ்மாயில் திஹ்லவி என்பவர் '**தக்வியத்துல ஈமான்**' எனும் பெயரில் மொழிபெயர்த்து இந்தியாவில் முதன் முதலில் வஹ்ஹாபியக் கொள்கைகளை பரப்பினார். இக்கொள்கைக்கு பலமான எதிர்ப்பு கிளம்பி இஸ்லாமிய ஷரீஅத் படி அவர் கொல்லப்பட்டு அடக்கஸ்தலம் கூட இல்லாமல் பிரயாணிகளுக்கு இரையாக்கப்பட்டார். இவரின் கொள்கைகளை இவரின் சிஷ்யர்களான **ரஷீத் அஹ்மது கங்கோஹி, காஸிம் நானூத்தவி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி,** போன்றோர் மிகவும் கண்ணியத்துடன் போற்றிப் புகழ்ந்து இவரை 'ஷஹீத்' எனவும் அழைக்கின்றனர். இப்படி முதன் முதலில் வஹ்ஹாபியக் கொள்கையை இந்தியாவில் பரப்பிய இஸ்மாயில் திஹ்லவியையும் அவரது அடிவருடிகளையும் தனது குருமார்களாக ஏற்றுக் கொண்டவர்தான் இல்யாஸ் காந்தலவி. இவர் தோற்றுவித்த இயக்கம்தான் இன்றைய தப்லீக் ஜமாஅத். இந்த இயக்கத்தின் நோக்கமே வஹ்ஹாபியக் கொள்கைகளை பரப்புவதுதாதான்.

'**தப்லீக் ஜமா அத் பற்றி தவறான குற்றச்சாட்டுகளும் தக்க பதில்களும்**' எனும் நூலில் நமது சுன்னத்வல் ஜமாஅத்தின் மூலக் கொள்கைக்கு முற்றிலும் மாறான நச்சுக் கருத்துக்களை (வஹ்ஹாபியக் கொள்கைகளை) எழுதியுள்ளனர்.

மேற்படி நூல் மூல ஆசிரியர் : ஷைகுல் ஹதீஸ் முஹம்மது ஜகரிய்யா சாகிப்.

தமிழாக்கம் :- மௌலவி அ.கலீல் அஹ்மத் (மன்பஈ பாஜிலே தேவ்பந்த்) கீரனூரி.

அணிந்துரை வழங்கியவர் :-மௌலவி மீ.இ.மு.அபுல்ஹஸன் ஷாதலி(நூரிய்யி &பாஜில் பாகவி)

(ஆசிரியர், 'ஜமா அத்துல் உலமா மாத இதழ், சென்னை மாநில ஜமாஅத்துல் உலமா சபை தலைமைக் குழு உறுப்பினர்.)

1. **அல்லாஹ் பொய் சொல்ல சக்தியுடையவன்** :- தப்லீக் ஜமா அத்தின் கொள்கை.

மேற்படி '**தப்லீக் ஜமா அத் பற்றி தவறான குற்றச்சாட்டுகளும் தக்க பதில்களும்**' (த.த.கு.த.ப) என்னும் நூலின் பக்கம் 161ல்:-

குர் ஆன் உடைய இந்த இரண்டு ஆயத்துக்ளைக் கவனியுங்கள், ஒன்று, 'நீங்கள் அவர்களிடையே இருக்க அல்லாஹ், அவர்களை வேதனை செய்பவனாக இல்லை.'(அல்-குர்ஆன்) இரண்டு: நபியே கூறுங்கள்! உங்கள் மீது வேதனையிறக்க அவன் சக்தி கொண்டவன்' (அல்-குர்ஆன்) முதல் ஆயத்திலே வேதனை இறக்க மாட்டேன் என்று கூறும் ஆண்டவன், இரண்டாவது ஆயத்திலே வேதனை இறக்க சக்தியுடையவன் என்று கூறுகிறான். 'அதாபு இறக்க மாட்டான், இறக்க சக்தியுள்ளவன்' என்பதுதானே இதன் பொருள். இதே போன்று தான் கங்கோஹி கொடுத்த ஆதாரம் மிக்க பத்வாவும். 'அல்லாஹ் பொய் சொல்ல மாட்டான், ஆனால் பொய் சொல்ல சக்தியுடையவன்.'

இதை மறுத்து யாராவது கூறினால் (நமது மறுப்பாளர்கள் கூறுவது போல) இறைவன் சில காரியங்களை செய்ய சக்தியற்றவன் என்று ஏற்றுக் கொள்வதாகவே அர்த்தமாகும். இறைவனை சக்தியற்றவன் என்று யாராவது கூறினால், என்ன ஆகும்? என்பது எல்லோருக்கும் தெரியும்'; என்று கூறியுள்ளார்.

ஆனால் அதே நூல் 159வது பக்கத்தில் ரஷீது அஹ்மது கங்கோஹி அப்படி ஒரு 'பத்வா கொடுக்கவில்லை என்றும் 160 வது பக்கத்தில் அல்லாஹ் உடைய 'தாத்' பொய் என்பதை விட்டும் மிக தூய்மையானதும், பரிசுத்தமானதாகும். அல்லாஹ் பொய் சொல்வான் என யாராவது நம்பிக்கை கொண்டிருந்தாலோ, கூறினாலோ, காபிரானவனும், சபிக்கப்பட்டவனும் குர்ஆன், ஹதீது, இஜ்மா ஆகியவற்றிற்கு மாறு செய்தவனுமாவான். நிச்சயமாக மு ஃமினல்ல என எழுதிவிட்டு அல்லாஹ் பொய் சொல்ல சக்தியுடையவன் என முன்னுக்கு பின் முரணாக எழுதுகிறார். இப்படிதான் எல்லா குற்றசாட்டுகளுக்கும் முன்னுக்கு பின் முரணாக எழுதுகிறார். இதற்குதான் எங்கள் குருநாதர் காயல்பட்டணம் ஸுபி ஹழ்ரத் அவர்கள், தப்லீக் ஜமா அத்தை **'தப்லீஹ் ஜமாஅத்து'** என்று அதாவது **மக்களை மடையனாக்கும் ஜமாஅத்** என்று சொல்வார்கள்.

தப்லீக் ஜமா அத் ஸ்தாபகர் இல்யாஸின் குருவாகிய இஸ்மாயில் திஹ்லவி ஏக்றோஜி எனும் நூல் பக்கம் 145ல் 'அல்லாஹ் பொய் சொல்வது அசம்பாவிதம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம்' என்று எழுதியுள்ளதையும், ரஷPத் அஹ்மத் கங்கோஹி தனது பராஹீனே காத்திஆ எனும் நூல் பக்கம் 2ல் 'அல்லாஹ் பொய் சொல்லலாம் என்ற மஸ்அலாவை இப்போது புதிதாக யாரும் சொல்லவில்லை. முன்னோர்களிலேயே அபிப்பிராய பேதம் உண்டு' என்று எழுதியதையும் சரிகண்டு, அப்படி சொல்வது ஆகும் என்ற மேற்கண்ட த.த.கு.த.ப எனும் நூலில் கூறியுள்ளார்.

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி-பரிசுத்தமான அல்லாஹ்வை புகழ்கிறேன் எனப் பல்லாயிரம் தரம் புகழ்ந்து கொண்டு அல்லாஹ் பொய் சொல்ல சக்தியுடையவன் என அல்லாஹ்வின் பரிசுத்த இலட்சணத்தில் அறுவறுப்பான பொய்யை சேர்ப்பவரை என்னவென்று சொல்வது?

அல்லாஹ்வின் 'தாத்து' உள்ளமை பரிசுத்தமானது அப்படியிருக்க பரிசுத்தத்தில் இருந்து வெளியாகும் 'குத்ரத்து' – சக்தி என்ற 'சிபத்து' - இலட்சணம் அருவருப்பான பொய்யை எப்படி ஏற்றுக் கொள்ளும்? சிந்தித்துப் பாருங்கள்!

மஆதல்லாஹ்! இவர்களுடைய கூற்றை விட்டும் அல்லாஹ் நம்மை காப்பாற்ற வேண்டும். நமது ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையாகிறது, பொய் என்ற குணம் குறையைச் சேர்ந்தது. குறைவைத் தருகிற இலட்சணங்கள் அல்லாஹ்வின் தாத்து – உள்ளமைக்கு ஏற்றதல்ல. குறைவுகளை விட்டு அவன் பரிசுத்தமானவன். எனவே பொய் சொல்வது என்பது அவனுக்கு முஹால் - அசம்பாவிதம். அசம்பாவிதமான குணங்களில் இறைவனின் சக்தி வெளிப்படாது. பொய் எனப்படும் குறையைச் சார்ந்த குணம் அல்லாஹ் அளவில் சேரவில்லை என்பதற்காக அவனுடைய சக்தி குறைந்து விட்டதாக அல்லது பரிéரணமற்றதாக ஆகிவிட்டது எனச் சொல்ல முடியாது. ஆண்டவனுடைய குணங்கள் அனைத்தும் பரிéரணத்துவம் பெற்றவைகளாகும்.

மேலும் அல்லாஹ் பொய் சொல்வது முஹால் - அசம்பாவிதம் என்று அகாயிதுல் அளுதிய்யா, பக்கம் 22, ஸரஹுல் மகாஸீத், ஹாஷிய்யா ஷரஹில் அகாயிது பக்கம் 50, தவாளியுள் அன்வார், மஷாயிறா பக்கம் 205, முசாமறா பக்கம் 206, தப்ஸீருல் கபீர் பாகம்3, பக்கம்143, பாகம் 5, பக்கம் 541, பாகம்13 பக்கம் 161, தப்ஸீர் பைளாவி பாகம் 5, பக்கம் 87 – 121 தப்ஸீர் நஸபி பாகம் 1, பக்கம்241, தப்ஸீர் அஜீஸியா சரஹு சநூஸி, தப்ஸீர் ரூஹுல் பயான், தப்ஸீர் ஜலாலைன், ஸரஹு பிக்ஹுல் அக்பர் போன்ற எண்ணற்ற கிரந்தங்களில் காணக்கிடக்கிறது.

2. **தொழுகையில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைப்பது ஆடு, மாடு, கழுதையின் நினைப்பில் மூழ்குவதைவிட ஏன் ஜினா செய்கிற நினைப்பில் மூழ்குவதை விட கெட்டது:-**

மேற்கண்ட த.த.கு.த.ப. எனும் நூல் பக்கம் 136 ல் 'தனது ஷெய்க் அல்லது யாராவது ஒரு பெரியார், நாயகமேயானாலும் அவர்களின்பால் 'ஸர்பெ ஹிம்மத்' செய்வது (அதாவது, எல்லாவற்றை விட்டும் தனது கவனத்தை திருப்பி, இந்தப் பெரியோர்களின்பால் முழுக்க முழுக்க செலுத்துவது) மாடு, கழுதையைப் பற்றிய எண்ணத்தில் மூழ்குவதை விடக் கெட்டதாகும். ஏனெனில், பெரியோர்களின்பால் அந்நேரத்தில், 'ஸர்பெ ஹிம்மத்' செய்யும்போது அது, அவர்களைப் பற்றிய கண்ணிமும், பெருமையும் கொண்ட எண்ணத்தோடு உள்ளத்தின் அடித்தளத்தில் இடம் பிடிக்கும். (அதாவது, இப்பெரியோர்களுடன் அன்பு, கண்ணியத்தோடு உள்ள தொடர்பு இருக்கும் காரணத்தால், அப்போது மனம் அதிலே éரண அழிவுநிலை அடைந்து, அதிலே இன்பம் காண முற்படும். அப்போது, ஆண்டவனைப் பற்றிய நினைவு ஏழாமல், அவனை மறந்தநிலை ஏற்படும். இது தொழுகையின் உயிர் நாடிக்கே மாற்றமானதென்பதும், 'இபாதத்'தின் நோக்கத்திற்கு முரணானது என்பதும் யாவரும் அற்ந்ததே)

'......... ஆண்டவனல்லாத ஒரு பொருளைத் தொழுகையில் கண்ணியத்தோடும், மரியாதையோடும் நினைத்து அந்த நினைவில் மூழ்கிவிடுவதென்பது, சில சந்தர்ப்பங்களில் 'ஷpர்க் வரை கொண்டு சேர்த்துவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

சிந்தியுங்கள்! கவனத்தை 'செலுத்துவது' என்பது கவனம் அப்பொருளின் மீது செல்லவும் இடமுண்டு, சொல்லாமலிருக்கவும் இடமுண்டு. ஆனால் ஒரு எண்ணத்தில் 'மூழ்குவது' என்பது தன்னையும் மறந்து, பிறரையும் மறந்துவிடுவது. இவர்கள் மாடு, கழுதையைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கி அல்லாஹ்வை மறந்தாலும் பரவாயில்லை, நமது உயிரினும் மேலான நாயகம் ஹல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மற்றும் சாலிஹீன்களுடைய எண்ணம் வருவதுகூட கூடாது என்கின்றனர். இவர்கள் இப்படிச் சொல்வது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மற்றும் சாலிஹீன்களின் மீது கொண்டுள்ள 'ஹஸதை' (கபட எண்ணத்தை) தான் காட்டுகிறது. இவர்களை உண்மை முஃமீன் என்று எப்படி சொல்வது?

இதற்கு காரணம் இன்னொன்றையும் அதே (த.த.கு.த.ப) நூலில் கூறுகிறார். மாடு, கழுதை பற்றிய எண்ணம் நமக்கு வரும்போது தரக்குறைவாக வரும். ஆனதால் இறைவணக்கத்தில் இறைவனை மறக்கடிக்காது. ஆனால் தொழுகையில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், மற்ற சாலிஹீன்களை நினைக்கும் போது அவர்களின் எண்ணம் கண்ணியத்தோடு வருவதால் அல்லாஹ்வை மறந்த நிலை ஏற்படும் என்கிறார். என்னே! இவர்களின் கூற்று! இவர்களின் கூற்றுப்படி தொழுகையின் பாகமாகிய அத்தஹியாத்தில் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சலாம் சொல்வது கண்ணியத்தோடு சொல்ல வேண்டுமா? கண்ணியமில்லாமல் சொல்ல வேண்டுமா? கண்ணியமில்லாமல் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைப்பதே குப்ராகும் என்று இமாம்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவெல்லாம் விளங்காமல்தான் ஷைகுல் ஹதீஸ் என்றும், ஆலிம்கள் என்றும் பெயர் வாங்கினார்களா?

மேலும் தப்லீக் ஜமாஅத் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் தமது மக்தூபாத் 90 வது பக்கத்தில் 'அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யாரஸூல்லாஹ்' என்று சொல்வதிலும் இதே பேச்சுத்தான். நபி ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹாளிர், நாளிர் (ஆஜராகுகிறார்கள் - பார்க்கிறார்கள்) என்று நம்பிக் கொண்டோ அல்லது பித்அத்காரர்களுக்கு ஒப்பாகிற விதமாகவோ இருந்தால் அது விலக்கப்பட்டதாகும்' என்கிறார்.

ஒரு சம்பவம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது கொண்டிருந்த ஒரு சஹாபியை அழைத்தார்கள். அச்சஹாபி தொழுகையை முடித்துவிட்டு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். உடனே ஏன் தாமதமாக வந்தீர்கள்? என நபி அவர்கள் வினவ, 'யாரஸூலுல்லாஹ் நான் தொழுகையை முடித்துவிட்டு வந்தேன்' என அந்த சஹாபி சொன்னதுமே, யா அய்யுஹல்லதீன ஆமனுஸ்தஜிéல்லாஹி வலிர்ரஸூலி இதா ஆக்கும் - 'ஈமான் கொண்டவர்களே! உங்களை (அவனது) ரஸூல் அழைத்தால் அல்லாஹுக்கும் அவனது ரஸூலுக்கும் பதில் கொடுங்கள் ... (8.24) என்று அல்லாஹ் கூறியிருப்பதை அறியவில்லையா? என்று நபி ஹல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். இதைதான் நமது நான்கு மத்ஹபுக்குரிய பிக்ஹு கிதாபுகளிலும் தொழுது கொண்டிருப்பவரை ரஸூல் ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய ஜீவிய காலத்திலும், மறைந்த பின்பும் ரஸூல் ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழைத்தால், அவ்வழைப்பிற்கு உடனே சென்று வந்து, விட்ட இடத்திலிருந்து தொழுதால் போதுமென்றும், தொழுகை முறியாது என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இதே கருத்து – துர்ருல் முக்தார் பாகம்1-பக்கம் 358 லும் கல்êபி, உமைரா பாகம் 1 பக்கம் 189 லும் கூறப்பட்டுள்ளது.

இமாமுனா கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இஹ்யா உலூமித்தீன் பாகம் 1 பக்கம் 143 ல், 'தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும்போது, உன் மனதில் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைத்து அவர்களின் சங்கையான உருவத்தை ஞாபகபடுத்திக் கொண்டு அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகக்காத்ஹு என்று சொல். நீ சொல்கின்ற ஸலாம் அவர்களுக்கு எட்டி விடும். அவர்கள் அதை (ஸலாமை) விடவும் பரிéரணமான ஸலாமைக் கொண்டு உனக்கு பதில் சொல்வார்கள் என்று உன் எண்ணத்தை உறுதிபடுத்திக் (உண்மைப்படுத்திக்) கொள்' என்கிறார்கள். இவைகளையெல்லாம் தெரிந்தும் மறுக்கிறவர்கள் முஃமினா? முனாபிகா? சிந்தியுங்கள்.

3. **இறுதி நபிக்குப் பிறகும் நபி வரலாம்:-**

தேவ்பந்த் மத்ரஸா ஸ்தாபகர் முஹம்மது காஸிம் நானுத்தவி 'தஹ்தீருன்னாஸ்' எனும் நூல் பக்கம் 2,3ல் 'சாமான்ய ஜனங்கள் அபிப்பிராயத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு பொருள் அவர்கள் இறுதி நபியாயிருக்கும். அவர்களுக்குப் பின் வேறு நபியில்லை என்பதாகும். ஆனால் காலத்தில் முந்துவதிலோ, பிந்துவதிலோ விசேஷமில்லை என்பது புத்திமான்களுக்கு விளங்கும்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் நபி வரலாம் எனும் வாயிலைத் திறக்கிறார். இதை த.த.கு.த.ப எனும் நூலில் பக்கம் 168ல் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் த.த.கு.த.ப எனும் நூல் 153, 154ம் பக்கங்களில் எழுதியுள்ளதை அப்படியே தருகிறோம். அதில், 'தானவியிடம் பைஅத் செய்து கொள்ளாத ஒருவர் (பைஅத் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்து உள்ளார்). அவர் கனவு காணுகிறார். அஷ்ரப் அலி தானவி பெயரைக் கலிமாவில் ஓதுவதாக அவர் கடிதத்தில் தானவிக்கு எழுதுகிறார்.

'இப்படி ஓதுவது சரியல்ல என்பது எனக்கு கனவிலும் புரிகிறது. ஆனால் நான் விரும்பாமலேயே எனது நாவு இதை இரண்டு, மூன்று முறை கூறுகிறது... அப்போது தங்களை என்முன் காணுகிறேன்... இதனிடையே நான் விழித்துக் கொண்டேன். இந்த நினைவை மனத்தை விட்டும் போக்க வேண்டுமென்று, பிறகு திரும்பி படுத்து, நாயகத்தின் மீது ஸவாத் ஓதி, தவற்றுக்கு பரிகாரம் காண முயலுகிறேன். ஆனால் அப்போதும், 'அல்லாஹும்மஸல்லி அலா சையிதினா வமவ்லானா அஷ்ரப் அலி' என்றே நாவில் வருகிறது. நான் தூங்கி

விடவில்லை விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் நான் சுய இஷ்டத்தோடு இல்லை. கட்டுண்டவனாக இருக்கிறேன். நாவும் எனது இஷ;டத்தில் இல்லை.

இக்கடிதத்திற்கு தானவி பதில் எழுதினார்கள். இந்த நிகழ்ச்சியில் உங்களுக்கு ஆறுதல் கூறப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் யாரின்பால் செல்ல நாடுகிறீர்களோ, அவர் சுன்னத்தை பின்பற்றியவரேயாவார்' என்று

இதற்கு பதில் அளிக்கும் விதமாக, த.த.கு.த.ப எனும் நூலில் ஹழரத் ஷpப்லி ரஹிமஹுல்லாஹ்வில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தஜல்லி – தோற்றம் கொடுத்ததை, 'கஷ்பு' ஞான திஷ;டை உடைய அவர்கள் முரீதும் விளங்கி, தம்மில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியாயிருப்பதை ஷpப்லி நாயகமவர்களும் உணர்ந்து ஷpப்லி ரஸூலுல்லாஹ் என்று கூற சொன்னதையும், அஷ்ரப் அலி ரஸூலுல்லாஹ் என்று கனவிலும் நனவிலும் வந்ததை தவறென உணர்ந்து அவற்றுக்குப் பரிகாரம் கோருபவனின் கூற்றையும் ஒன்று படுத்தி எழுதியுள்ளார். இது எவ்வகையில் ஒன்றாகும்?

அஷ்ரப் அலியின் சீடர் அஷ்ரப் அலி ரஸூலுல்லாஹ் என்று தான் கூறியதை தவறு என்று உணர்ந்து தவற்றுக்குப் பரிகாரம் தேட முயன்றது மூலம் அவருக்கு 'கஷ்பு' – ஞான திஷ்டை இல்லை என நன்கு விளங்குகிறது. சீடனின் வினாவிற்கு, 'நீர் என்னை ரஸூல்' என்று சொல்வதால், 'குப்ர்' ஏற்பட்டுவிட்டது. நீர் அவசியம் ஈமானைப் புதுப்பித்து தவ்பாச் செய்ய வேண்டும் என்றல்லவா சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்லாமல், இதன் மூலம் உனக்கு சாந்தி உண்டாகும் என்று அஷ்ரப் அலி சொன்னதால், அஷ்ரப் அலிக்கும் கஷ்பு இல்லை எனத் தெளிவாகிறது கஷ்புடைய தன்மையில் சொன்னதையும், கஷ்பில்லாமல் நிகழ்ந்ததையும் ஒன்றுபடுத்தி ஷரீஅத்தில் எவ்வாறு கூற முடியும்.

நாங்களும் ஷரீஅத், தரீகத்வாதிகள் தான் என்று பிதற்றித் திரியும் ஷரீஅத், தரீகத்தை விளங்காத இவர்களின் மேற்கூறப்பட்ட குழப்பகாரத் தலைவர்களை ஹகீமுல் உம்மத் என்றும், ஷைகுல் ஹதீஸ் என்றும் கூறித் திரிகிறார்கள். இவர்களையெல்லாம் மு..மினாக்குவதற்கு எந்த மு..மீன் - முஸ்லிமாவது முன்வர இயலுமா? மார்க்கத்தில் இதற்கு ஆதாரம்தான் கிட்டுமா?

மேலும் இதே போன்றுதான் இன்னொணுருவிதமாக அஷ;ரப் அலியின் சீடர், தப்லீக் ஜமா அகத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் பேச்சுத் தொகுப்பை மௌலானா மன்ஜூர் நு..மானி லக்னவி அவர்கள் உர்துவில் திரட்டி எழுதிய 'மல்பூஜாத்தே ஹழரத் இல்யாஸ்' என்ற நூலை கம்பம் மௌலவி A.சதக்கத்துல்லா பாகவி அதீபே பாஜில் அவர்கள் 'மௌலானா இல்யாஸ் மணிமொழிகள்' என்று தமிழில் மொழிப் பெயர்த்து லால்பேட்டை மன்பவுல் உலா அரபிக் கல்லூரி பேராசிரியர் மௌலவி ஜியாவுதீன் அஹமது அமானி ஹஜ்ரத் அவர்களின் சிறப்புரையுடனும் 'ரஹ்மத்' மாசிகை ஆசிரியர் மௌலவி B.A. கலீலுர் ரஹ்மான் சாகிபு ரியாஜி அவர்கள் மதிப்புரையுடனும் 19-03-1967ல் வெளி வந்துள்ளது.

மேற்படி நூல் 62-63 பக்கம் 50ம் மணிமொழியில், கனவு நுபுவத்தின் 46வது பாகம் என்றும் தனக்கு தூக்கத்தில் அபிவிருத்தி ஏற்பட்டு தன்னை நபியைப் போன்றவர் என அறிவிக்கப்பட்டதாக கூறுகிறார். இவ்வாறு தன்னை நபியென அறிவித்தப் பிறகு அதே நூல் பக்கம் 65ல், 51வது மணி மொழியாக 'மிஸ்கீன்களுக்கு ஜகாத்து கொடுப்பதை மறுக்கிறார். தான் நபியென்பதற்கு சான்று கூறும் முகமாக குர்ஆனை மறுத்து மிஸ்கீன்களுக்கு ஜகாஅத் கொடுக்க கூடாது என்று சொல்வதெல்லாம் ஈமானை வலுவூட்டும் செயலா? ஈமானை முற்றிலும் போக்கி அல்லாஹ், ரஸூல் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாகக் கூடிய செயலா? சிந்தியுங்கள்!

இதே கருத்தைத்தான் இப்போதைய தப்லீக் ஜமா அகத்தின் இளவல்கள் 'தப்லீக் வேலை செய்பவர்களுக்கு நபிமார்களது அந்தஸ்து உண்டு' எனச் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள்.

ஆதாரம் :- இலங்கை தினகரன் நாளிதழ் (பிப்ரவரி 27,1981)

இப்படி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் நபி வரலாம் என்று சொன்னது மட்டுமல்லாமல் தன்னையும் நபியென பிரகடனப்படுத்திய இவர்களை முஃமீன் என்று சொல்ல முடியுமா? சிந்தியுங்கள்!

4. **நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செருப்புத் தைக்கும் செம்மானை விட அற்பமானவர்கள்:-**

இஸ்மாயில் திஹ்லவி தக்வியத்துல் ஈமான் எனும் நூலில் 'எல்லா சிருஷ்டிகளும் பெரியதோ – சிறியதோ அல்லாஹ்வின் முன்னால் செம்மானை (செருப்புத் தைப்பவனை) விட மிகவும் அற்பமானவர்களேயாகும்' என்று எழுதியுள்ளதை மேற்படி த.த.கு.த.ப எனும் நூல் பக்கம் 143ல்

'இறைவனிடம் எவ்வளவு தான் சமீபமாகிவிட்டவர்களானாலும் சரி வஹ்தஹு லாஷரீகலஹுவான இணை துணையற்ற அந்த அல்லாஹ்வின் முன், மகா பெரிய அந்தஸ்து கொண்ட ராஜாதிராஜனது முன் ஒரு சாதாரண மனிதனுக்கு உள்ள அந்தஸ்து கூட இருக்க முடியாது. உதாரணமாக மாபெரும் அரசுகளின் முன்னிலையில் செருப்பு தைக்கும் செம்மானைப் போல என்று விளக்கப்படுத்தி சரிகண்டு எமுதியுள்ளர்.

இந்த இடத்தில் இறைவனிடம் 'எவ்வளவு தான் சமீபமாகி விட்டவர்களானாலும் சரி' என்று சொல்லும் போது, அது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களானாலும் சரி! மற்ற ஏனைய நபிமார்களானாலும் சரி என்று நீதி மன்ற விவாதத்தின் போது (கிரிமினல் கேஸ் எண் 1129 **of 1969 Offence under sec 500 of I.P.C** அகமதாபாத் கபாட்வாஞ்ச் கோர்ட், குஜராத்) தப்லீக் ஜமா அத்தினர் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே இவர்களின் ஈனத்தனம்! செருப்பு தைப்பவனை நமது நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், மற்ற நபிமார்களுக்கும் உவமையாகக் கூறி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கண்ணியத்தை தரம் தாழ்த்தி எழுதியுள்ளார்.

த.த.கு.த.ப எனும் நூல் பக்கம் 138, 139ல் 'இபாதத் உங்களது ரப்பாகிய அல்லாஹ்விற்கு மட்டுமே நீங்கள் செய்ய வேண்டும். உங்களது சகோதரருக்கு (அதாவது எனக்கு) கண்ணியமும், மரியாதையும் அளியுங்கள் (மிஷ;காத் - பாபு உஷ;ரதின் நிஸா) எனும் ஹதீதுக்கு விளக்கம் கூறுமுகமாக'

மனிதர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர். மிகப் பெரியவர் என்றால் அவர் மூத்த சகோதரர், மூத்த சகோதரருக்குச் செய்யப்படும் மரியாதைப் போன்று அவருக்கு மரியாதை செய்யுங்கள்' என்று எழுதியுள்ளார். அப்படியானால் ஒரு சமயம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு பிடிப்பதற்கும், நோன்பு திறப்பதற்கும் எவ்வித உணவும் உட்கொள்ளாமல் தொடர் நோன்பு வைப்பதைக் கண்ட நபித் தோழர்கள் அவ்வாறே தொடர் நோன்பு வைத்தனர். இதை அறிந்த நபி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்களை நோக்கி நீங்கள் நோன்பு பிடிப்பதற்கும், நோன்பு திறப்பதற்கும் உணவு உட்கொண்டீர்களா? என வினவ, நீங்கள் உணவு உட்கொள்ளவில்லையே அதனால் நாங்கள் உணவு உட்கொள்ளவில்லை என்றார்கள். உடனே நபி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'நான் உங்களைப் போன்ற மனிதரா? என்று கேட்டார்கள்.

இதிலிருந்து புலனாவது, ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மை போன்ற மனிதர் இல்லை என்பதாகும். ஒரு ஹதீதுக்கு ஒரு ஹதீது முரண்படுமேயானால், இரண்டு ஹதீதையும் காரணகாரியங்களைக் கொண்டு ஆராய்ந்தல்லவா எழுத வேண்டும்? அப்படியில்லாமல் தன் கொள்கைக்கு தக்கவாறு எடுத்தெழுவது எப்படி பொருந்தும்? இதுகூட ¡ஷகுல் ஹதீஸ் என்பவருக்கும், மற்ற அவர்களது ஆலிம்களுக்கும் தெரியாதா?

நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மை போன்ற சகோதரர் என்றால் நமக்கு நிழல் விழுவதுபோல், அவர்களுக்கு நிழல் விழுந்ததா? நாம் பிறந்தது போன்று அபத்தின் வழியாகவா அவர்கள் பிறந்தார்கள்? நமது கால்தடம் மணலில் பதிவது போன்று அவர்களின் கால்தடம் மணலில் பதிந்ததா? நம்மில் எளிய சகோதரர்கள் ஜகாத்தை வாங்குவது போன்று அவர்கள் வாங்கினார்களா? கொடுக்கலாமா? நாம் இறந்த பின்பு நமது மனைவியை பிறரொருவர் மணக்கலாமே? அவர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களின் மனைவியை மணக்க இயலுமா? நமக்கு தாயல்லவா? ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை குறைவு கண்டு எழுதிய ஷைகுல் ஹதீஸுக்கும், மற்ற ஆலிம்களுக்கும் இந்த சட்ட திட்டங்கள் புரியாதா? தெரியாதா?

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னை சகோதரர் என சொன்னதை வைத்து நம்மைப் போன்ற சகோதரருக்கு ஒப்பிடலாமா? அப்படி ஒப்பிடுவது எவ்வகையில் பொருந்தும்? சாதாரணமாக ஒரு நாட்டுப் பிரதமர் நம்மை நோக்கி, நான் உங்கள் ஊழியன் என்று சொன்னதை வைத்து நமது வீட்டு வேலைகளை செய்துதர அவர்களைப் பணிக்க இயலுமா? பணித்தால் நமது அரசாங்கம் நம்மை விட்டுவைக்குமா? இப்படிக் குறைக்கூறலாமா? எனவே

படைப்புகளில் மிக விசேஷமான ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இவ்வாறு எண்ணலாமா? எழுதலாமா?

ரஸூலுல்லாஹ்வை உயர்வாக மதிப்பது கொண்டு எந்த ஒரு மதியீனனும் அல்லாஹ்வுடைய அந்தஸ்துக்கு ரஸூலுல்லாஹ்வைக் கொண்டு வந்ததாக சொல்லவே மாட்டான். காரணம் ரஸூலுல்லாஹ் -அல்லாஹ்வின் தூதர் என்றாலே அல்லாஹ் வேறு, தூதர் வேறு என விளங்கும்போது ரஸூலுல்லாஹ்வை அல்லாஹ்வுடைய அந்தஸ்துக்கு கொண்டு வந்ததாக எப்படி ஆகும்?

இவ்வாறு அல்லாஹ்வையும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் பிரித்தறியக்கூடிய கருத்து இருக்கும்போது, மூத்த சகோதரருடைய மரியாதைத்தான் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும், அல்லாஹ்வின் முன்னிலையில் செம்மானைவிட அற்பமானவர்கள் என்றும் சொல்வது ரஸூலுல்லாஹ் மீது அன்பு கொண்டு சொல்வதா? கபடமாக சொல்வதா? ஆராய்ந்து பாருங்கள்.

5. **நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவது ஷிர்க்:-**

ரஷீPத் அஹ்மது கங்கோஹி பதாவா ரஷீதிய்யா பாகம் 2 பக்கம் 10ல் 'நாயகம் ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவது சுத்தமான ஷிpர்க்காகும்'என்று கூறுகிறார்.

இதே கருத்தை கூறும் முகமாக அஷ்ரப் அலிதானவி என்பவர் ஹிப்ளுல் ஈமான் எனும் நூலில் எழுதியதாக த.த.கு.த.ப எனும் நூல் பக்கம் 156,157ல்

'நாயகம் ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஆலிம் - பில் - கைப் (மறைந்தவற்றையெல்லாம் அறியக் கூடியவர்கள்) என்று அல்லாஹ்விற்கு நிகராக்கி கூறக் கூடாது. சுூpல மறைந்தவற்றை அறிந்தவர்கள் என்ற அர்த்தத்தில் கூறுகிறோம் என்று யாராவது கூறினால் சில மறைந்தவை என்னும் போது நாயகம் அவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும், அவற்றை அறிந்திருக்கலாமே! ஜைதை விட்டு மறைந்ததை அம்ரு அறிந்திருக்கலாம். அம்ரை விட்டு மறைந்த விஷயத்தை ஜைது அறிந்திருக்கலாம். எனவே சில மறைந்தவற்றை என்று அருத்தம் கொண்டு சொல்வது கூடாது. அப்படியே கூடும் என்றால், அந்தச் சிலவற்றை – ஏதோ ஒன்றை ஒவ்வொருவரும் அறிந்திருக்கலாமே நபியவர்களுக்கு இதில் என்ன விசேஷம் இருக்கிறது? என்று எழுதியுள்ளார்.

'அல்லாஹ் மனிதரை படைத்து அவருக்கு விபரத்தை அறிவித்துக் கொடுத்தான்.'- குர்ஆன் 55:4

அல்லாஹ் மனிதரை அதாவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் படைத்து அவர்களுக்கு விபரத்தை அறிவித்துக் கொடுத்தான். அதாவது,

உண்டானது, உண்டாகக் கூடியதுகளின் விபரத்தை அறிவித்துக் கொடுத்தான். ஏனென்றால் அவர்கள் முன்னோர்களைப் பற்றியும் பின்னோர்களைப் பற்றியும், கியாமத்து நாளைப் பற்றியும் விபரிக்கிறார்கள்.

-தப்ஸீர் ஸாவி, தப்ஸீர் காஸின், தப்ஸீர் ஜமல.;

அப்துர்ரஹ்மான் இப்னு ஆயிஷா ரலியல்லாஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்து செய்யப்படுகின்றது. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் '... மலஉல் அஃலாவின் (மேல் உலகத்தில்) உள்ளவர்கள் எது விஷயத்தில் ஒருவருக்கொருவர் பலதரப்பட்ட அபிப்ராயமாக பேசிக் கொள்கிறார்கள், என்று அல்லாஹ் கேட்டான். 'நீயே மிக அறிந்தவன்' என்று சொன்னேன். அவன் தனது கிருபை எனும் கரத்தை எனது இரு தோள் புயங்களின் மேல் வைத்தான். அதன் அருளை (பைளை) என் திருமார்பின் நடுவே பார்த்தேன். வானம், éமியிலுள்ளவைகளை எல்லாம் அறிந்து கொண்டேன்.

- மிஷ்காத் பக்கம் 69

வானம் éமியிலுள்ளவைகளை எல்லாம் அறிந்தேன் என்பதன் கருத்தாவது, எல்லாவகையான குல்லி, ஜூஸ்இ (தொகுப்பானவை, பகுப்பானவை) அனைத்தைப் பற்றியும் அறிந்தார்கள் என்பதாகும்.

சகல சிருஷ;டிகளுக்கும் இரண்டு நிஃமத்துக்கள் அவசியம் தேவை. அதாவது, அந்தகாரத்தில் கிடந்த சிருஷ்டிகளானது இல்லாமையிலிருந்து உண்மைக்கு வந்தது ஒரு நிஃமத். அப்படி உள்ளமைக்கு வந்த சிருஷ்டிகள் நிலைபெறுவதற்காக வேண்டி அவைகளுக்கு உணவு அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு உணவளித்து (குறிப்பிட்ட காலம்) நிலைபெறச் செய்வது இரண்டாவது நிஃமத். இந்த இரண்டு நிஃமத்களை விட்டும் உலகத்தில் எந்த ஒரு பொருளும் விலக்காகாது. இந்த இரண்டு நிஃமத்துக்களுக்கும் காரணமானவர்களே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான்.

இதை தான் நாயகமவர்கள் கூறினார்கள். 'நான் அல்லாஹ்வின் நூரிலிருந்தும் வந்தேன். சகல பொருட்களும் என்னுடைய நூரிலிருந்து வந்தன.' 'அல்லாஹ் கொடுக்கிறான். நான் தான் அதைப் பங்கு வைக்கிறேன்.'

இப்படி சகல வஸ்துக்களும் உண்டாகுவதும், நிலைத்து நிற்பதும் ரஸூல் ஹல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பொருட்டினால்தான். ஆகவே எந்தப் பொருளும் ரஸூலுல்லாஹ் அவர்களுக்கு தெரியாமலிருக்க முடியாது. எதிலிருந்து? எதற்காக? எப்பொழுது? எங்கெங்கு? எப்படி? அவைகள் போகின்றன என்ற அனைத்தையும் அவர்கள் அறிவார்கள்.

மேலும் அல்லாஹுத்த ஆலா குர் ஆனில் பல இடங்களில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரிக்கும் முன்பே நடந்த நட்சத்திர நிகழ்ச்சிகளை 'நீங்கள் நினைத்து பாருங்கள்' எனக் கூறி ஞாபகமூட்டுகிறான் என்றால் நாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைத்தையும் அறிந்திருப்பதால் தானே இறைவன் அவ்வாறு கூறுகிறான். இப்படி ஞாபகப்படுத்தி கொள்ளுங்கள் என யாரிடம் சொல்வார்கள்? ஏற்கனவே தெரிந்திருக்கும் ஒருவரிடமல்லாது, தெரியாதவதவர்களிடமா சொல்வார்கள்? இப்படி 'நினைத்துப் பாருங்கள்' என சொல்வதினால் நபிகள் நாயகமவர்களுக்கு அணைத்தும் தெரியும்! என்பது புலனாகிறதல்லவா?

ஆனால் இந்த தப்லீக் ஜமா அத்துக்காரர்களது கூற்று என்னவென்றால், 'அல்லாஹ்க்கும் எல்லாம் தெரியும், ரசூலுல்லாஹ்க்கும் எல்லாம் தெரியும் என்று சொல்வதன் மூலம் இருவரின் அறிவையும் சமமாக்கி விட்டீர்களே! என்று கூறுவது. இது அவர்களின் புத்திக்குறைவினால் கூறப்படும் கூற்று.

நம்முடைய சுன்னத் வல் ஜமாஅத்தின் அகீதா என்னவென்றால், ரசூலுல்லாஹ் எல்லாம் அறிவார்கள் என்பது அல்லாஹ் அவர்களுக்கு அறிவித்துக் கொடுத்ததினால் அறிவார்கள். ஆனால் அல்லாஹ் அறிவது யாரும் அறிவித்துக் கொடுத்து அல்ல! சுயமாகவே அல்லாஹ் அறிவான். ரசூலுல்லாஹ்வின் அறிவு எல்லைக்குட்பட்டது! அல்லாஹ்வின் அறிவு எல்லைக்குள் அடங்காத அறிவாகும். அல்லாஹ்வின் அறிவு éர்வீகமானது. ரசூலுல்லாஹ்வின் அறிவு புதிதானது. எனவே அல்லாஹ்வின் அறிவுக்கு ரசூலுல்லாஹ்வின் அறிவு சமமாகாது.'

ஆக இப்படி நபியவர்களுக்கு இதில் என்ன விசேஷம் இருக்கிறது என்று விஷமத்தனமான இந்த தப்லீக்காரர்கள் உளறுகிறார்கள் என்றால் இவர்களுடைய ஈமானைப் பற்றி என்ன சொல்வது? சிந்தித்துப் பாருங்கள்.

6. ஜமா அத்துல் உலமா எனும் மாத இதழ் 1972 அக்டோபர் (ஷஃபான் 1392) பக்கம் 8ல் தப்லீக் ஜமாஅத்தைச் சேர்ந்த மௌலவி V.U.A. யூசுப் அன்சாரி என்பவர், மிஃராஜ் ஏன் ஏற்பட்டது? எனும் தலைப்பில் கட்டுரை எழுதும் போது.

('அன்னை கதீஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களும், அபூதாலிபு அவர்களும்) நுபுவ்வத் 11-வது ஆண்டு முடிவில் அவ்விருவரும் மறைந்தனர். அவர்களின் மரணம் நபியவர்களுக்கு நீங்கா துயரை நல்கியது. இரு கரங்களையும் இழந்தவராய், இரு இறக்கைகளை பறிகொடுத்த பறவையாய் மனமுடைந்தனர். எதிரிகளின் எதிர்ப்புகள் கொழுந்து விட்டு விண்ணளாவ எரிந்தது. அத்தீச்சுவாலைகள் அவர்களின் பொன்மேனியை கரிக்கத் தொடங்கியது. இப்படி துன்பங்கள் தொடர்ந்து அவர்களைத் தாக்கும்போது அவர்களது உள்ளத்து வலிவும், இறை நம்பிக்கையும் ஆட்டம் கண்டு விடலாம் அல்லவா? இது நபிமார்களுக்கு ஏற்பட்ட இயல்புதான்' என்று கூறியுள்ளார்.

மஆதல்லாஹ்! நம் எல்லோர்களையும் 'இறை நம்பிகையில் ஆட்டம் காணாது உறுதிபடுத்த வந்த நபிமார்கள், ரசூல்மார்களுக்கு அல்லாஹ்வின் மீது கொண்டுள்ள ஈமான் - இறை நம்பிக்கை ஆட்;டம் காணுமா? சிந்தியுங்கள்!

மௌலவி êசுப் அன்சாரியின் 'இறை நம்பிக்கையில் ஆட்டம் கண்டுவிடலாம் அல்லாவா? இது நபிமார்களுக்கு ஏற்பட்ட இயல்புதான்' என்ற இந்த கூற்றுக்கு தகுந்த விதமாக மறுப்பு வெளியிட்டதற்கு கிட்டதட்ட மூன்றரை வருடங்கள் கழித்து ஜீலை1976 (ரஜப்,1396) ஜமா அத்துல் உலமா மாத இதழ் பக்கம் 10-14ல் ஏதோ சப்பை கட்டும் விதமாக தமிழ் அகராதிக்கே பொருந்தாத விதத்தில் விளக்கங்கள் கூறி தன்னுடைய அதே கருத்துக்களை ஆணித்தரமாக ஒப்புக் கொண்டுள்ளார். இப்படிப்பட்ட உலமாக்களைப் பற்றியும்,' ஜமா அத்துல் உலமா மாசிகை பற்றியும் என்னவென்று சொல்வது? புரிந்து கொள்ளுங்கள்.

7. **ஸிராத்தே முஸ்தகீம் பாலத்திலிருந்து நாயகம் அவர்கள் தவறி கீழே விழுகின்றனர்:-**

ரஷீத் அஹ்மத் கங்கோஹியின் மாணவர் ஹுஸைன் அலி என்பவர் 'புல்கத்துல் ஹைரான்' எனும் நூலில் பக்கம் 59ல் 'நபிகள் என்னை ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் அழைத்து கொண்டு செல்வதாக கனவு கண்டேன். அப்போது நபிகளார் பாலத்தினின்றும் தவறிக் கீழே விழுந்து கொண்டிருந்தனர். உடனே நான் பெருமானார் கீழே விழுவதினின்றும் தடுத்துக் கொண்டேன்.' என்று எழுதுகிறார்.

நம்மையெல்லாம் நல்வழிப்படுத்திய நமது நாயகமவர்கள், நமக்காக இறைவனிடம் மன்றாட்டம் (ஷபாஅத்து) செய்யும்போது நாயகமவர்கள் ஸிராத்தே முஸ்தகீம் பாலத்தினின்றும் கீழே விழுகிறார்களாம். இவர்கள் தடுக்கிறார்களாம். என்னே! இவர்களின் கூற்று! மஆதல்லாஹ்! அல்லாஹ் நம்மை காப்பாற்ற வேண்டும். இப்படிப்பட்டவர்களை உண்மை முஃமின் என்று சொல்ல முடியுமா? சொல்ல மனம் வருமா? சிந்தியுங்கள்!

ஒரு ஸாலிஹான மனிதருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் தரிசனம் கொடுத்தபோது உர்துவில் பேசினார்களாம். உடனே நாயகமே, நீங்கள் அரபி பேசுபவர்களல்லவா? எங்கிருந்து உர்து பாiஷ படித்தீர்கள்? என அவர் வினவ, நபி அவர்கள் நான் தேவ்பந்த் மத்ரஸா உலமாக்களோடு பழகினதால் என்க்கு உர்து பேசத் தெரிந்தது என சொன்னார்களாம். இக்கனவை கலீல் அஹ்மது அப்பேட்டி தனது 'பராஹீனே காத்திஆ' எனும் நூலில் பக்கம் 26ல் எழுதியுள்ளார்.

இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை குறை காணும் கட்டுக்கதை கனவல்லவா? இது உம்மி நபி என்று சொல்வதற்கு மாற்றமல்லவா? சிந்தியுங்கள்?

மேலும் இந்த தப்லீக் ஜமா அத்தினர்கள் நமது சுன்னத் - வல் ஜமா அத் கொள்கைகளை மறுக்கும் முகமாக வஸீலா தேடுவதும், மீலாது ஷரீபு எடுப்பதும், கந்தூரி எடுப்பதும், மௌலிது ஓதுவதும் கூடாது என்பது போன்ற பல்வேறு கொள்கைகளை எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

இவர்களின் முகமூடியைக் கிழித்தெறியும் முகமாக '**தப்லீக் ஜமாஅத் விவாத மாநாடு' என்று இலங்கை மாத்தறையில் (கோட்டைக்கரை) ஜும்ஆ பள்ளியில் 8-8-1965ல்** நடத்தினார்கள். அதில் வாதிகள், ஹாஜி சூபி செய்கு அப்துல் காதிர் ஆலிம் அவர்கள்

தலைமையிலும், பிரதிவாதிகள் தரப்பில் 12 தப்லீக் ஜமா அத்தினரும் வாதம் செய்தனர். இம்மாநாட்டில் இருதரப்பினரின் ஏகோபித்த சம்மத்துடன் பின்வருவோர் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. ஷெய்குல் பஹ்ஜா, அல்ஹாஜ் மவ்லவி H.L. அப்துல்ஹமீது அவர்கள் (அரபிக் கல்லூரி பிரின்ஸிபல், காலி)

2. மவ்லவி பாஸில் A.L. முகம்மது கவுஸ் பாக்கவி அவர்கள்

3. ஜனாப். M.I.M.காஸிம் ஹாஜியார் J.P.அவர்கள் (பட்டின சபைத் தலைவர், காத்தாங்குடி)

இம் மாநாட்டில் தப்லீக் ஜமா அத்தினர் வாதிகள் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதிலை சொல்ல முடியாமல் அவர்களுடைய முகங்களெல்லாம் கறுத்துவிட்டன. தாங்கள் தோற்றுவிடுவோம் என்பதையறிந்த தப்லீக் ஜமா அத்தினர் எந்தவித தீர்வும் ஏற்படாதபடி மாநாட்டில் கூச்சலையும் குழப்பத்தையும் ஏற்படுத்திவிட்டு வெளியேறியது மட்டுமில்லாமல் இம்மாநாட்டில் நடைபெற்ற விவாதங்கள் பற்றி தப்பும் தவறுமாக எழுதி, வீணான உண்மைக்குப் புறம்பான தீர்ப்புகளும் எழுதி பிரசுரம் வெளியிட்டனர். இந்தப் பிரசுரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் மேற்படி த.த.கு.த.ப. என்னும் நூல் பக்கம் 185ல் 'தப்லீக் ஜமா அத்தில் மார்க்கத்திற்கு விரோதமான கொள்கை இல்லையென்றும், வாதி சூபி ஹழ்ரத் அவர்களை இனிமேலும் வீணான துஷ்பிரயோகங்களை செய்யாது விட்டுவிடும்படி தீர்ப்பளிக்கப்படுகிறது.' என்று எழுதியுள்ளனர்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன? மூன்று நீதிபதிகளில் ஒருவரான யு.டு முகம்மது கவுஸ் பாக்கவி அவர்களின் கையெழுத்தை தப்லீக்காரர்கள் திருட்டுத்தனமாக பெற்று, பிளாக் எடுத்துக் கொண்டு தங்கள் சுய இஷ;டப்படி தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு எழுதி அதில் மேற்படி நீதிபதி அவர்களின் கையெழுத்தை (பிளாக் எடுத்தது) அச்சிட்டு வெளியிட்டனர்.

முஸ்லீம் சகோதரர்கள் இவர்களின் திருட்டுத்தனத்தையும், ஆலிம்கள் எனும் வேஷத்தையும் தெரிந்து கொள்வதற்கும், உண்மை நிலையை எடுத்துரைப்பதற்கும் 'விவேகமில்லாத மாநாடும் வீணான தீர்ப்புகளும்' எனும் தலைப்பில் பிரசுரம் ஆதாரத்துடன் வெளியிட்டு தப்லீக் ஜமா அத்தினரின் முகமூடியை கிழத்தெறிந்தனர் இலங்கை சுன்னத் வல் ஜமாஅத்தினர். இப்பிரசுரத்தை காயல்மாநகர் கண்ணியத்திற்குரிய மௌலானா மௌலவி nஷய்கு அப்துல் காதிர் ஆலிம் நூரி ஸித்தீகி காதிரி ஸூபி ஹழரத் அவர்கள் எழுதிய தப்லீக் என்றால் என்ன? என்ற நூலோடு இணைத்து வெளியிட்டு உள்ளார்கள்.

**தப்லீக் ஜமா அத்து நிறுவனர், அவர்தம் குருநாதர்கள் மற்றும் தப்லீக் ஜமா அத்து பற்றி கொடுக்கப்பட்டுள்ள (பத்வா) மார்க்கத் தீர்ப்புகள்** :-

1. ஹிஜ்ரி 1336ல் பர்ரத் மின்கஸ்வரா என்ற தலைப்பில் அல்ஆலிமுல் அல்லாமா அப்துல் அலீம் ஸித்தீகி காதிரி மீரட் மௌலானா அவர்கள் அஷ்ரப் அலி தானவியை (இஸ்யாஸின் குருவை) 'காபிர்' என்று பத்வா வெளியிட்டுள்ளார்கள்.

2. மக்கா மதீனாவிலுள்ள 34 மாபெரும் மேதைகளான உலமாக்களின் கையொப்பங்கள் சிறப்புரைகளோடு ஹுஸாமுல் ஹரமைன் அலா மன்ஹரில் குப்றிவல்மைன் என்ற தலைப்பில் ஹிஜ்ரி 1324ல் குலாம் அஹ்மது காதியானி, ரஷீத் அஹ்மது கங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப்அலி தானவி (இல்யாஸின் குரு) ஆகியோர்கள் 'காபிர்கள்' என்று பத்வா வெளி வந்துள்ளது.

3. ஷம்ஷ{ல் உலமா, குத்புல் அ ்லியா, இமாமுல்புகஹா முஹம்மது அப்துல்லாஹில் குராஸானி ஜிஷ்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 'அஸ்ஸுயூபுல் பாரிகா அலாருஊசில் பாசிகா, என்ற பத்வா கொடுத்திருக்கிறார்கள்.

இந்த பத்வாவை மக்கா முகர்ரமா, மதினா முணவ்வராவில் உள்ள சங்கைக்குரிய 12 உலமாக்கள் சரிகண்டு சிறப்புரை வழங்கியுள்ளார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் நான்கு மத்ஹபுகளுக்குரிய மக்கா முப்தியும், சங்கைமிகு ஸஹீஹுல் புகாரி ஷரீபின் 'அபூர்வ துஆ' கோர்வையாளரும், ஷாதுலிய்யா தரீக்காவை சார்ந்தவர்களுமான அல்லாமா ஸெய்யித் அஹ்மத் இப்னு தஹ்லானி ஷாதுலி ரஹிமல்லாஹு ஆவார்கள்.

4. கீழக்கரை சங்கைக்குரிய பெரியார் அல்ஆலிமுல் அரூஸ் அல்லாமா செய்யிது முஹம்மது மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஒலியுல்லாஹ் அவர்கள் மகானி யில் 177-178 பக்கங்களில் இஸ்மாயில் திஹ்லவியை முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பின்பற்றிய வழிகெட்ட மடையன் என்று எழுதியுள்ளார். அதேபோன்று ஹதியா ஷரீபிலும் வந்துள்ளது.

5. இந்தியாவின் பல பாகங்களிலுள்ள சங்கைக்கரிய 268 உலமாக்கள் 'அஸ்ஸவாரிமுல் ஹிந்தியா' என்ற தலைப்பில் மேற்கூறப்பட்டவர்கள் காபிர்கள், முர்தத்துகள் என்று மார்க்கத் தீர்ப்பு ஹிஜ்ரி 1345ல் வழங்கியுள்ளார்கள்.

6. ஹிஜ்ரி 1372ல் மௌலானா மௌலவி முஹம்மது மஹ்éப் அலிகான் லக்னவீ அவர்கள் 'அல்அதாபுல் பஸ் அலாரஸி இல்யாஸ் (இல்யாஸ் தலைக்கு கொடிய வேதனை) என்ற தலைப்பில் இல்யாஸ் காபிர் என்று பத்வா கொடுத்துள்ளார்கள். இதை இந்தியாவிலுள்ள 45 உலமாக்கள் சரிகண்டு கையொப்பம் இட்டுள்ளனர்.

7. வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வரும் சென்னை மாநில ஜமா அத்துல் உலமா சபை நிரந்தர கௌரவ தலைவருமான மௌலானா மௌலவி அல்லாமா முப்தியுல் அ ்லம் nஷய்கு ஆதம் ஹழரத் அவர்களும், மேற்படி கல்லூரி பேராசிரியர்கள் அனைவர்களும், தேவ்பந்த் தாருல் உலூம் அரபிக் கல்லூரி நாயிபு முப்தி மௌலானா மௌலவி மஸ்ஊத் அஹ்மத் சாஹிப் அவர்களும், லக்னோ ஆலிய்யா நிஜாமிய்யா அரபிக் கல்லூரி முப்தி மௌலானா மௌலவி முஹ்ம்மது அப்துல் காதிர் சாகிப் அவர்களும், தமிழ்நாடு அரசு காஜி மௌலானா மௌலவி முஹம்மது ஹபீபுல்லாஹ் ஹழரத் அவர்களும், பெங்களூர் ஹக்கானியா அரபிக் கல்லூரி முப்தி மௌலானா மௌலவி அபுல்கமால் முகம்மது ஹபீபுல்லா பாகவி, நத்வீ அவர்களும் இல்யாஸ் தப்லீக் ஜமா அத்தை எதிர்த்து 1956ல் கொடுத்த

பத்வாக்களின் தொகுப்பு 'பதாவா ஆலிய்யா' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. (செய்தி : மறுமலர்ச்சி வார இதழ்)

8. இந்தூர் சிட்டி மௌலானா மௌலவி முப்தி அபுல் ஜமீல் முஹம்மது ரிள்வானுர் ரஹ்மான் சாகிபு ஹனபி, பாரூகி அவர்கள், ஜராதீமுல் வஹ்ஹாபிய்யா பில் ஜமாஅத்தித் தப்லீகிய்யா என்ற தலைப்பில் ஒரு நூல் 1954ல் தப்லீகை எதிர்த்து வெளியிட்டுள்ளார்கள்.

9. உத்திரப்பிரதேசம் பாந்தா தாரூல் உலூம் அரபிக் கல்லூரி முதல்வர் மௌலானா மௌலவி முப்தி பீர்ஜாதா செய்யித் மள்ஹர் ரப்பானி அவர்கள் 'தப்லீக் ஜமா அத் கியோஹே' என்ற தலைப்பில் 1962ல் இல்யாஸ் தப்லீக்கை எதிர்த்து நூல் வெளியிட்டுள்ளார்கள்.

10. பரேலி ஆலி ஜனாப் மௌலானா மௌலவி ஸூபி ஷாஹ் அஜீஸ் அஹ்மது சாகிபு அவர்கள் இஸ்மாயில் திஹ்லவி எழுதிய 'தக்வியத்துல் ஈமான்' என்ற நூலுக்கு மறுப்பாக 'இஸ்லாஹே தப்வியத்துல் ஈமான்' என்ற நூலை எழுதியுள்ளார்கள்.

11. தமிழ்நாடு அரசு பிரதம காஜி மௌலானா மௌலவி அல்லாமா முப்தி முகம்மது ஹபீபுல்லாஹ் ஹழரத் அவர்கள் 'தப்லீக் ஜமா அத்கீ அஸலியத் என்ற தலைப்பில் இல்யாஸ் தப்லீகை எதிர்த்தும், அதில் சேரக்கூடாது என்றும் 1970ல் தீர்ப்பளித்துள்ளார்கள். இந்த பத்வாவின் கடைசிப் பக்கத்தில் தப்லீக் ஜமா அத்தை எதிர்த்து பத்வா கொடுத்த இந்தியாவின் முக்கிய நகரங்களின் சங்கையான 21 உலமாக்களின் பெயர்கள் வரையப்பட்டுள்ளது.

12. பீகார் மௌலானா அர்ஷதுல் காதிரி ஹழரத் அவர்கள் தப்லீக் ஜமா அத் என்ற தலைப்பில் இல்யாஸ் தப்லீக் ஜமா அத்தை எதிர்த்து 1971ல் நூல் வெளியிட்டார்கள்.

13. சமஸ்த்த கேரள ஜம்இய்யத்துல் உலமா சபை பத்வா கமிட்டியரால் தப்லீக் ஜமா அத்தார்களின் சகல நூல்களையும் ஆராய்ந்து தீர்வு கண்டு இந்த இல்யாஸின் தப்லீக் ஜமா அத்தில் சேரக்கூடாது என்று 1965ல் தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்கள். இந்தத் தீர்மானம் 10-11-1965 'சந்திரிகா' இதழில் வெளிவந்துள்ளது.

14. வேலூர் பாக்தியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி, காயல்பட்டணம் மஹ்ரலத்துல் காதிரிய்யா அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வரும் கண்ணியமிக்க மௌலானா மௌலவி முப்தி பி.ஏ.முஹம்மது அபூபக்கர் கிப்லா ஹழரத் அவர்கள் 12-8-1971ல் நல்ல விளக்கமாக ஆதாரத்துடன் தப்லீகை எதிர்த்து பத்வா கொடுத்துள்ளார்கள். இது முஸ்லீம் முரசு மாத இதழ் 1972, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் இதழ்களில் பத்வா வெளியாகியுள்ளது.

15. இலங்கை கஹட்டோவிட்டையில் சமாதியுற்றிலங்கும் சங்கைக்குரிய மௌலானா ஷெய்கு அப்துல்லா பாதிப் ரஹிமஹுல்லாஹு 'அல்ஹஜருல் காஸி' என்ற நூல் பக்கம் 176 ல் இஸ்மாயில் திஹ்லவி தான் விரும்பியவாறு குர் ஆனுக்கு தப்பான அர்த்தம் செய்பவன் என்றும், முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பின்பற்றியவன் என்றும் எழுதியுள்ளார்கள்.

16. ஒரிஸ்ஸாவின் சிங்கம் எனப் புகழப்படும் காதிரிய்யா தரீகாவின் nஷய்குமான மதிப்பிற்குரிய ஹாஜி முப்தி மௌலானா மௌலவி ஹபீபுர் ரஹ்மான் ஹழரத் அவர்களும் ஒரு பத்வாவை இல்யாஸ் தப்லீகை எதிர்த்து உர்துவில் வெளியிட்டிருப்பதோடு, நாடெங்கும் தப்லீக்கின் முகமூடியை கிழித்தெறிந்தார்கள்.

17. தேவ்பந்த் கொள்கையுடைய உலமாக்கள் பின்னால் தொழுவது கூடாது என்ற பத்வா ஒன்று பாகிஸ்தான் கராச்சியிலிருந்து வெளிவரும் 'டெய்லி முஷாவாத்' என்ற தினசரியில் (30-7-1979) வெளியிடப்பட்டது.

18. தப்லீக் இயக்க ஸ்தாபகர் இல்யாஸ் மௌலானாவின் சகலரும் அவ்வியக்கத்தை நிறுவுவதில் ஒத்துழைத்து சமீபகாலம் வரை தப்லீக் ஜமா அத்தினரால் போற்றப்பட்டு வந்தவருமான மவ்லானா இஹ்த்திஷhமுல் ஹஸன் காந்தலவி என்பவர் மனம் மாறி அவ்வியக்கத்தின் அந்தரங்கங்கள் பற்றி சில ரகசிய தகவல்களை வெளியிட்டு அவ்வியக்கத்தை 'வழமையல்லாத வழிகெடுக்கும் நடைமுறை' (பித்அத் தேளலாலத்) என்று வர்ணித்து இருப்பதாக தெரிகிறது. -(முஸ்லிம் முரசு செப்டம்பர் 1971).

19. காயல்பட்டணம் கண்ணியத்திற்குரிய மௌலானா மௌலவி அல்ஆலிமுல் பாழில் nஷய்கு அப்துல் காதிரி நூரிய்யி, ஸித்தீகி, சூபி ஹழரத் அவர்கள் 1.) இன்ஹாருல் 2.) தப்லீக் என்றால் என்ன? 3.) தப்லீக் ஜமா அத் பற்றி உலமாக்களின் உண்மை பத்வா. 4) புலியைக் கண்டு ஓட்டம். 5) அல்முஹன்னதின் அண்டப்புளுகு. 6) தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் என்று தப்லீக் ஜமாஅத்தை எதிர்த்து நூற்களை வெளியிட்டுள்ளார்கள்.

20. சிங்கப்பூரில் 'அறிவுச்சுடர்' என்ற தமிழேடு தப்லீக் இயக்கத்தின் வஹ்ஹாபியக் கொள்கையை அம்பலப்படுத்தியுள்ளது. துருக்கியிலுpருந்து இஸ்லாமிய நூல்களை வெளியிடும் ஒரு நிறுவனம் தப்லீக் இயக்கத்தை பற்றியும், அதன் தலைவரையும், அவரின் குருமார்களையும் 'காபிர்கள்' என்ற பத்வாக்களை மேற்கோள்காட்டி தக்க ஆதாரத்தோடு, வழிகெட்ட கூட்டங்களில் தப்லீக் இயக்கமும் ஒன்று, அதில் சேரக்கூடாது. என்றும் பக்கம் 206ல் **"THE RELIGION REFORMERS IN ISLAM"** என்ற ஆங்கில நூலில் சுட்டிக் காட்டியுள்ளது.

21. 'ஹக்வ – பாதிலிகீஜங்' ஆசிரியர் மௌலானா மௌலவி ஹாபிழ்காரி அéநஸர் ஷhஹ் இனாயத் ரஸூல் முஹம்மது உமர் சாஹிபு காதிரி ஜிஸ்தி லக்னவி அவர்கள்.

22. 'அதாபுஸ்ஸதிது' ஆசிரியர் முபாரக்பூர் (உ.பி) மௌலானா மௌலவி முப்தி ஹாபிழ் அப்துல் அஜீஸ் சாஹிபு கிப்லா அவர்கள் .

23. 'ரிஸாலா-தப்ஹீமுல் மு∴தற் சரிகண்டு கையெழுத்திட்டவர்களில் 38 பேர்களில் குறிப்பித்தக்கவர்கள் 1.) சென்னை அல்லாமா முப்தி முஹம்மது ஸிப்கத்துல்லாஹ் ஆலிம் அவர்கள், 2.) அல்லாமா முப்தி முஹம்மது இர்தழா அலிகான் (ஆசிரியர் - நபாயிஸ்) அவர்கள்.

24. ஹக் வபாதில்கீ பஹ்சானா ஆசிரியர் - முழபர்பூர் - ஹழரத் அல்லாமா முப்தி முஹம்மது அபுல்கலாம் சாஹிபு ஹஸன் காதிரி அவர்கள்.

25. 'தப்லீக்-ஏ-தோகா' ஆசிரியர் மௌலானா மௌலவி முஹம்மது மன்ஸூர் அலி கான் காதிரி ரஸ்வி.

26. 'அத்தன்கீது – அலத்தன்கீது' ஆசிரியர்கள் வேலூர், பெங்களூர் உலமாப் பெருமக்கள்.

27. 'அல் ஜபனுத்தானவி அலாகுல்லியத்துல்தானவி' ஆசிரியர் மௌலவி முப்தி காரி முஹம்மது அஹ்மது ரிழாகான்

28. 'தப்லீக் அசாயீத்-அவுர்-உலமாயாகே பத்வா' ஆசிரியர் டி.பி. முஹம்மது உதுமான் ரப்பானி – நாழிமியவர்கள்.

29. 'இல்யாஸி ஜமாஅத்' ஆசிரியர் கான்éர் அல்லாமா முப்தி – அஃழம் ஷாஹ் ரிபாகத் ஹுசைன் ஆலிம் அவர்கள்

30. 'தப்லீக் ஜமாஅத்-கி-ஹகீக செஹ்ரா' ஆசிரியர் மௌலவி செய்யது அஸ்மத் பாஷா சாஹிபு.

31. 'தப்லீக் ஜமாஅத்-அஹாதீக்க-ரோஸினிமே' ஆசிரியர் மௌலவி அற்ஸத் காதிரி.

32. 'தப்லீக் ஜமா-அத்-க-பரீப் ஆசிரியர் அல்லாமா முப்தி செய்யது துராபுல் ஹக் சாஹிபு அவர்கள்.

33. 'இம்தியாஸ் ஹக்' ஆசிரியர் லாஹூர் மௌலானா முப்தி ராஜ்குலாம் முஹம்மது அவர்கள்.

34. 'அகீதா உலமாயி தேவுபந்த்' மௌலானா ஷhஹ் அப்துல் அஜீஸ் முராதபாத் அவர்கள்.

35. 'தப்லீக் ஜமா-அத்கா ஆயினா- மௌலானா இல்யாஸ்கா-ஆயினா

ஆசிரியர் மௌலானா மௌலவி முஹம்மது ஹபீபுல்லாஹ் ஆலிம் முப்தி பாகவி-நத்வி காதிரி வேலூர் அவர்கள்.

36. 'ரத்தி தக்வியத்துல ஈமான்'-ஆசிரியர் மௌலானா மௌலவி

முப்தியுல் அஃழம் பத்ருத்தீன் ஸாகிபு கிபுலா ரஜ்வி (பம்பாய்) அவர்கள்.

மேற்கூறிய பத்வாக்கள் கொடுத்தவர்கள் எல்லாம் மிகவும் சாமானியர்கள் அல்ல. இவர்களெல்லாம் இஸ்லாத்திற்காக பாடுபட்ட மஹான்கள், இறைநேசர்கள் என்பது யாவரும் அறிந்ததே.

**இந்திய நீதிமன்றங்களின் தீர்ப்புகள் :**

1. குஜராத் மாநிலம் அஹமதாபாத் நகரில் 'தாருல் உலூம் ஷாஇ ஆலம்' எனும் அமைப்பு ஸுன்னி முஸ்லீம்களின் கலைக்கூடமாக 1953ல் நிறுவப்பட்டு அதன்மூலம் 'தைய்யிபா' எனும் பத்திரிக்கை வெளியிடப்பட்டு வந்தது. 1968 டிசம்பர் இதழில் காயிரா மாவட்ட கபாட்வாஞ்ச் எனும் ஊரின் ஜும்மா மஸ்ஜிதில் பணியாற்றி வந்த பேஷ; இமாம் ஜனாப் குலாம் ஹுஸேன் தார்ஸோத் அவர்களை '**வஹ்ஹாபி தேவ்பந்தி**' எனக் குறிப்பிட்டிருந்ததால், அவர் கபாட்வாஞ்ச் முதல் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றத்தில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 500ன் கீழ் 22-5-1969ல் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு நீதிமன்றத்தில் 1129Æ69 என்ற நம்பரில் பதிவாக்கப்பட்டது.

வாத, பிரதிவாதங்கள் நடந்தன. இறுதியாக நீதிபதி கிருஷ்ணபண்டிட் அவர்கள் 27-2-1970ல் தப்லீக் ஜமா அத்தினர்களை 'தேவ்பந்தி வஹ்ஹாபி' என்றழைக்கலாம் என்றும் தப்லீக்காரர்கள் ஸுன்னத்-வல்-ஜமாஅத் பள்ளியில் நுழைவது கூடாது என்றும் தீர்ப்புக் கூறினார். மௌலவி குலாம் ஹுஸேன் அவர்கள் இந்த தீர்ப்பை எதிர்த்து குஜராத் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்தும், அது ஆரம்ப கட்டத்திலேயே தள்ளுபடி செய்யப்பட்டது.

2.) கர்நாடக மாநிலத்தின் பல்காம் உயர்நீதி மன்றத்தில், பல்காமை சார்ந்த காஸிம் N.C.O. அவர்களும், அவர்களது மூன்று சகாக்களும் ஜனாப் இப்ராஹிம் தாஜுதீன் அவர்களுக்கும் அவர்களது ஷாப்பூர் பள்ளிவாசல் பரிபாலன சபைக்கும் எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் போது, மேன்மை தங்கிய நீதிபதி R.B. பல்கங்காதர், 'தப்லீக் ஜமாஅத் இந்த சகாப்தத்தின் ஒரு சிருஷ்டியாதலின் அது முஸ்லிம் பொதுஜன சமுதாயத்தின் நம்பிக்கைக்கும், மனவுறுத்தலுக்கும் உரியதாக இல்லை என்றும், இதன் கொள்கைள் முஸ்லீம்களுடைய அடிப்படை கொள்கைகளில் சந்தேகத்தையும், பிளவையும் ஏற்படுத்தும் மூலகாரணியாகவும் இருப்பதால், தப்லீக் ஜமாஅத் கிதாபுகளை பள்ளியில் வாசிப்பதையும், இஜ்திமா நடாத்துவதையும் தடை செய்கிறேன்.' என்று தீர்ப்பு வழங்கினார்.

ஆதாரம் :- முஸ்லிம் டைஜஸ்ட் பக்கம் 47

நவம்பர் 1986 – பிப்ரவரி 1987.

3.) 13-10-1973ல் சிங்கபூர் கோர்ட் பள்ளியினுள் தப்லீக் ஜமா அத்தினர் பயான் செய்ய தடை விதித்துள்ளது.

தப்லீக் என்றால் 'எத்திவைத்தல்' என்று பொருள். ஏத்திவைத்தல் என்பது ஒரு விஷயத்தை ஒருவரிடம் சொல்லி அதை இன்னாரிடம் தெரிவித்து விடுங்கள் எனக் கூறுவது. அப்படியானால் அந்த விஷயம் தெரிவிக்கப்படும் நபருக்கு ஏற்கனவே தெரிந்திருக்க கூடாது. அப்படியானால் தான் அது எத்தி வைத்தல் என்பதாகும். ஏற்கனவே அந்த விஷயத்தை அவர் தெரிந்திருந்தால் அதற்கு எத்தி வைத்தல் என்று சொல்ல முடியாது.

தொழ வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, தொழுகைக்கு அழைப்பதை எத்திவைத்தல் (தப்லீக்) என எப்படி சொல்ல முடியும்? தஃவத் - அழைத்தல் என்று கூறலாம்.

எனவே தப்லீக் ஜமா அத்தினர் தொழுகைக்கு அழைப்பவர்கள் அல்லர். உண்மையிலேயே அவர்கள் எத்தி வைப்பவர்கள் தான் எதை? **வஹ்ஹாபியத்தை!**

இதைத்தான் தப்லீக் இயக்க ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் தீனித்ஃவத் எனும் நூல் பக்கம் 205ல் தனது நண்பர் ஒருவரை நோக்கி 'ளஹீருல் ஹஸன்! என்னுடைய கருத்தை ஒருவரும் விளங்கிக் கொள்கிறாரில்லை. மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள், இது தொழுகைக்கு அழைக்கும் கூட்டம் என்று. நான் சத்தியம் செய்து கூறுகிறேன். இது ஒரு போதும் தொழுகைக்கு அழைக்கும் இயக்கமல்ல. அதே நூல் மற்றொரு இடத்தில், (பக்கம் 226) எனது நோக்கம் ஒரு புதிய கூட்டத்தை உருவாக்குவதுதான்'என்கிறது.

இப்படி, தான் நினைத்தபடி ஒரு புதிய கூட்டத்தையே உண்டாக்கி விட்டார். எனவே நாம் யாவரும் இந்த வழிகெட்ட கூட்டத்திலிருந்து தவிர்த்து நேரான வழியில் நடப்பதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக!

*முற்றும்.*